பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்

முன்னிலை - திரு. கா. தனசேகரன் B.A., B.L., L.L.M.,

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சிறப்பு நீதிபதி, நாமக்கல்.

2020 ம் ஆண்டு ஜுன் மாதம் 25 ம் நாள் வியாழக் கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.01/2017**

| | |
|---|---|
| குற்ற முறையிடுபவர் | அரசுக்காக பரமத்தி வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர், ஜேடர்பாளையம் காவல் நிலையம் குற்ற எண் 36/2016 |
| எதிரியின் பெயர் | ராமசாமி த/பெ.வெங்கட்ராமன், வடுகபாளையம் புதூர், பரமத்தி வேலூர். |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | |
| 1 வது குற்றச்சாட்டு | பிாிவு 323 இதச. |
| 2 வது குற்றச்சாட்டு | 3(1)(r) of SC/ST (POA) Amendment Act 2015--ன் கீழ் பட்டியலில் கண்ட ஜாதியினா் மற்றும் பட்டியல் பழங்குடியினரை பொது இடத்தில் வைத்து அவமானப்படுத்தல் |
| 3 வது குற்றச்சாட்டு | 3(1)(s) of SC/ST (POA) Amendment Act 2015 -ன் கீழ் பட்டியலில் கண்ட ஜாதியினா் மற்றும் பட்டியல் பழங்குடியினரை பொது இடத்தில் வைத்து ஜாதி பெயரைச் சொல்லி திட்டி அவமானப்படுத்தல் |
| எதிரியின் எதிருரை | குற்றவாளி இல்லை |
| இந்நீதிமன்ற தீர்மானம் | **குற்றவாளி இல்லை** |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | முடிவாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மூலமும், சான்றாவணங்கள் மூலமும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரிகளை அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளான பிாிவுகள் 323 இதச. 3(1)(r) of SC/ST (POA) Amendment Act 2015, மற்றும் 3(1)(s) of SC/ST (POA) Amendment Act 2015 -ன் கீழ் எதிாியானவர் குற்றவாளி இல்லை என முடிவு |

செய்து குவிமுச 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மீதான பிணைப்பத்திரம் ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் இல்லாததால் சான்று பொருட்கள் பற்றிய உத்திரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

இந்த சிறப்பு அமர்வு வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்கு 10.10.2019 ம் தேதியன்று கொண்டு வரப்பட்டு அரசு தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு P. மாதேஸ்வரன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.கிருஸ்ணன் அவர்களும், முன்னிலையாகி செய்த வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்காவணங் களை பரிசீலனை செய்தும் இவ்வழக்கு என் சீரான பரிசீலனையில் இதுநாள் வரை இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

## <u>தீர்ப்புரை</u>

இந்த சிறப்பு அமர்வு வழக்கு நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

<u>2) குற்ற அறிக்கையின் சுருக்கம் வருமாறு</u>

இவ்வழக்கில் புகார்தாரர் கண்ணையன் என்பவர் மல்லிகாபுரம் காலனி பிலிக்கல்பாளையம் அருந்ததியர் தெருவில் வசித்து வருவதாகவும், அவர் அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், இந்த வழக்கின் எதிரி ராமசாமி என்பவர் இந்து ரெட்டியார் ஜாதியை சேர்ந்தவர் என்றும், அது பட்டியல் ஜாதியில் வராது என்றும், கன்னையன் தான் கரும்பு விவசாயிகளிடம் கரும்பை விலைக்கு பேசியும் கரும்பு ஆலைக்கு விலைக்கு பேசியும் அதில் தாம் தமக்கு தரகு கமிசன் பெற்று வரும் தொழில் செய்து வருகிறார் என்றும், அந்த வகையில் கரும்பு விவசாயி மருத்துவர் ஏ.பி.கணேசன் என்பவாிடம் ஒரு ஏக்கர் நிலத்தில் திரு.தனசேகரன் என்பவர் குத்தகைக்கு எடுத்த அதை பயிாிட்டு கரும்பை விளைவித்து கடந்த 05.03.2016 ம் தேதி 15 நாட்களுக்கு முன்பு கரும்பை வெட்ட தரகு பேசியுள்ளார் என்றும், மேற்படி தனசேகரன் தரகை சாிவர எடுக்காததால் கன்னையன் கரும்பு வெட்டுவதை சுமார் 15 செண்ட் நிலத்தில் நிறுத்திவிட்டார் என்றும், அதனால் மேற்படி தனசேகரன் எதிாி ராமசாமியை விட்டுபோன 15 செண்ட் நிலத்தில் இருந்த கரும்பை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்து வெட்டிவிட்டதாகவும், அது சம்மந்தமாக கடந்த 05.03.2016 ம் தேதி காலை 7.00 மணியளவில் எதிாி ராமசாமி என்பவர் பிலிக்கல்பாளையத்தில் உள்ள காவியா பேக்காி அருகே உள்ள ஆலமரத்தின் அடியில் தமது இருசக்கர வாகனத்தை நிறுத்தும் போது சாட்சி கன்னையன் தாம் விட்டுவிட்டு வந்த 15 செண்ட் நிலத்தில் கரும்பை ஏன் வெட்டினீர் என்றும் தமக்கு தனசேகரன் தரகு தரவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதனால் கோபம் அடைந்த எதிாி ராமசாமி தமது வலது கையால் தானாக முன்வந்து சாட்சி கன்னையனின் இடது பக்க கன்னத்தில் அறைந்து

காயத்தை ஏற்படுத்தி கண்ணையனை பார்த்து, “ ஏண்டா சக்கிலி நாயே நான் அப்படிதான் வெட்டுவேன் உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்", என்று சொல்லி பட்டியல் இனத்தனவரான கண்ணையனை வேண்டுமென்று பொது மக்கள் பார்வையில் அவமானப்படுத்தி சாதாரண காயம் விலைவித்தால் எதிரி ராமசாமி என்பவர் பிரிவு 323 இதச மற்றும் பிரிவு 3(1)(x) பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு சட்டம்) 1989-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக பரமத்தி வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் குற்ற இறுதி அறிக்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

3) மேற்படி நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண் 01/2017 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு குவிமுச 207 பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு இவ்வழக்கின் எதிரியும் அவருக்காக வழக்கறிஞரும் ஆஜரான பின்னர் அரசு தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு மேற்படி எதிரியின் மீது பிரிவு 323 இதச, 3(1)(r) of SC/ST (POA) Amendment Act 2015--ன் கீழ் பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை பொது இடத்தில் வைத்து அவமானப்படுத்தல், (1)(s) of SC/ST (POA) Amendment Act 2015 -ன் கீழ் பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை பொது இடத்தில் வைத்து ஜாதி பெயரைச் சொல்லி திட்டி அவமானப்படுத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கி வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என குற்றச்சாட்டினை மறுத்துள்ளார். இந்நிலையில் மேற்படி சிறப்பு அமர்வு வழக்கு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில் அ.சா.1 முதல் 13 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் 12 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு</u>

அ.சா.1 கன்னையன் மல்லிகாபுரம் அந்ததியர் தெருவில் குடியிருந்து கரும்பு வெட்டும் புரோக்கராக வேலை செய்து வருவதாகவும், தான் பட்டியல் வகுப்பைச் சேர்ந்த அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும் அவர் ரெட்டியார் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் கடந்த 05.03.2016ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் பிலிக்கல்பாளையத்தில் உள்ள காவியா பேக்கரிக் கடையில் டீ குடித்துக் கொண்டு தானும், பழனிவேல், ராஜு, சரவணன் ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது ஆஜர் எதிரி Hero Honda இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்ததாகவும் ஆனங்கூர் தனசேகரன் என்பவரின் நிலத்தில் சுமார் ஒரு ஏக்கர்

நிலத்தில் கரும்பு வெட்டுவதற்கு பேசி அதில் 15 செண்ட நிலத்தில் விளைந்த கரும்புகளை தவிர மற்ற கரும்புகளை வெட்டிவிட்டோம் என்றும், அந்த கரும்புகளை ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான ஆலையில் ஒப்படைத்து விட்டதாகவும், ஆஜர் எதிரியும் கரும்பு வெட்டும் புரோக்கர் வேலை செய்து வருகிறார் என்றும், மேற்படி ஒரு ஏக்கர் நிலத்தில் மீதியிருந்த 15 செண்ட் நிலத்தில் விளைந்த கரும்புகளை ஆஜர் எதிரி ராமசாமி கரும்புகளை வெட்டி வேறு ஒரு ஆலைக்கு அனுப்பி வைத்துவிட்டார் என்றும், மேற்படி காவியா பேக்காரி கடைக்கு எதிர்புறம் வந்த நின்ற ஆஜர் எதிரியிடம் ஆனங்கூர் தனசேகரன் என்பவரது நிலத்தில் தான் 85 செண்ட் இடத்தில் கரும்பு வெட்டியிருந்த சூழ்நிலையில் ஏன் நீங்கள் மீதமிருந்த 15 செண்ட் நிலத்தில் விளைந்த கரும்புகளை வெட்டி வேறு ஆலைக்கு அனுப்பினீர்கள் என்று தான் கேட்டதாகவும், அதற்கு ஆஜர் எதிரி தன்னிடம் உன்னை எதற்குடா கேட்கவேண்டும் சக்கிலி நாயே என்று சொல்லி திட்டிக்கொண்டே அவரது வலது கையால் தன்னுடைய இடது கன்னத்தில் அறைந்தார் என்றும் உடனே தான் நிலைகுலைந்து அதே இடத்தில் உட்கார்ந்து விட்டதாகவும், தன்னுடன் டீ குடித்துக்கொண்டு இருந்த பழனிவேல், ராஜு, சரவணன் ஆகியோர்கள் தனது மகன் குருசாமிக்கு தகவல் கொடுத்தனர் என்றும் பின்னர் தனது மகன் தன்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும் காலை 11.00 மணியளவில் தனது கன்னம் வீங்கி விட்டது என்றும் காது கேட்கவில்லை என்றும் பின்னர் வேலூர் அரசு மருத்துவமனையில் தன்னை சிகிச்சைக்காக தனது மகன் சேர்த்தார் என்றும் மறுநாள் 6ம் தேதி போலீசார் அங்கு வந்து தன்னை விசாரித்தார்கள் என்றும் அங்கிருந்து நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றார் என்றும் அங்கு சிகிச்சையில் இருக்கும் போது 9ம் தேதி ஜேடர்பாளையம் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், 10ம் தேதி காவல் துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார் என்றும் புகாரை தான் சொல்லச் சொல்ல எழுதி அதில் என்னிடம் கையெழுத்துப்பெற்றார் என்றும், தன் மனைவியிடமும் சாட்சி கையொப்பம்பெற்றார் என்றும் தான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. அதில் உள்ள தன் மனைவியின் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2. போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், அ.சா.2 திரு.ராஜு தங்கள் சாட்சியத்தில் தான் மல்லிகாபுரம் அருந்ததியர் தெருவில் குடியிருந்து விவசாயக் கூலி வேலை செய்து வருவதாகவும், சுமார் இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் தானும் பழனிவேல், சரவணன் ஆகியோர்கள் பிலிக்கல்பாளையத்தில் உள்ள ஒரு பேக்காரியில் டீ குடித்துக் கொண்டிருந்ததாகவும் , ஆஜர் எதிரி அப்போது இரு சக்கர வாகனத்தில் வந்தார் என்றும், அப்போது அ.சா.1 திரு.கண்ணையன், ஆஜர் எதிரியை நோக்கி சென்று கண்ணையன் வெட்டிய கரும்புத் தோட்டத்தில் நீங்கள் எதற்கு தான் வெட்டிய கரும்புத் தோட்டத்தில்

கரும்பை வெட்டினீர்கள் என்று கேட்டார் என்றும், அதற்கு ஆஜர் எதிரி நீ தன்னை ஏன்டா கேட்கிறாய் சக்கிலி நாயே என்று என்று சொல்லிக் கொண்டே கண்ணையன் கன்னத்தில் அறைந்துவிட்டார் என்றும் பின்னர் கண்ணையன் மகனுக்கு போன்செய்து தகவல் சொன்னதாகவும், மருத்துவமனைக்குசெல்ல வேண்டும் என்று சொல்லிக்கொண்டே கண்ணையனும், அவரது மகனும் சென்றார்கள் என்றும் தான்ஆஜர் எதிரியிடம் ஏன் கண்னையனை அடித்தீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி தன்னையும் அடிக்க வந்தார் என்றும் உன்னையும் அடித்துவிடுவேன் என்று தன்னை மிரட்டினார் என்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார்கள் என்றும், அ.சா.3 திரு.மாயவன் தங்கள் சாட்சியத்தில் பிலிக்கல்பாளையம் அருகே உள்ள நாகப்பாளையம் என்ற ஊரில் குடியிருந்து வருவதாகவும் தான் விவசாய கூலி வேலை செய்து வருவதாகவும் ஆஜர் எதிரியை தனக்கு தொியும் என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 7.00 மணியளவில் பிலிக்கல்பாளையத்தில் உள்ள பேக்காரியில் தானும், ராஜு, பழனி, கண்ணையன் ஆகியோர்கள் டீ குடித்துக்கொண்டு இருந்ததாகவும் அ.சா.1 கண்ணையன் அருகில் நின்று கொண்டிருந்ததாகவும் ஆஜர் எதிரி ராமசாமி அங்கு Hero Honda இரு சக்கரவாகனத்தில் வந்ததாகவும், அப்போது கண்ணையன் ஆஜர் எதிரி ராமசாமியிடம் அவர் வெட்டிய கரும்புக் காட்டை ஏன் நீங்கள்வெட்டினீர்கள் என்று கேட்டார் என்றும், அப்போது உன்னிடம் எதற்கு கேட்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு சக்கிலி நாயே என்று திட்டிக்கொண்டே அடித்துவிட்டார் என்றும் உடனே கண்ணையன் மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டதாகவும், பின்னர் தாங்கள் அ.சா.1 கண்ணையன் மகனின் பெயர் தொியவில்லை என்றும், சாட்சி தற்போது சொல்கிறார் கண்ணையன் மகன்பெயர் குருசாமி என்றும் கண்ணையன் மகனுக்கு போன் செய்ததாகவும் அவர் வந்து கண்ணையனை அழைத்து சென்றுவிட்டார் என்றும் சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், அ.சா.4 திரு.பழனி தங்கள் சாட்சியத்தில் மல்லிகாபுரம் காலனியில் குடியிருந்து வருவதாகவும், தான் விவசாய கூலி வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்குத் தொியும் என்றும் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 7.00 மணியளவில் பிலிக்கல்பாளையத்தில் உள்ள காவியா பேக்காரியில் தானும், ராஜு, பழனி, சரவணன், கண்ணையன் ஆகியோர்கள் டீ குடித்துக்கொண்டு இருந்ததாகவும் அ.சா.1 கண்ணையன் அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி ராமசாமி அங்கு Hero Honda இரு சக்கரவாகனத்தில் வந்ததாகவும், அப்போது கண்ணையன் ஆஜர் எதிரி ராமசாமியிடம் அவர் வெட்டிய கரும்புக் காட்டை ஏன் நீங்கள்வெட்டினீர்கள் என்று கேட்டார் என்றும், அப்போது உன்னிடம் எதற்கு கேட்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு சக்கிலி நாயே என்று திட்டிக்கொண்டே அடித்துவிட்டார் என்றும் உடனே கண்ணையன் மயக்கம்போட்டு

கீழே விழுந்துவிட்டதாகவும், பின்னர் தாங்கள் அ.சா.1 கண்ணையன் மகன் குருசாமி வரச்சொல்லி அவர்வந்து கண்ணையனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார் என்றும் சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், அ.சா.5 திரு.குருசாமி தங்கள் சாட்சியத்தில் மல்லிகாபுரம் காலனியில் வசித்து வருகிறார் என்றும் தான் கூலிவேலைசெய்து வருவதாகவும் கடந்த 05.03.2016ம் தேதி காலை 7.00 மணியளவில் தனது தகப்பனார்கண்ணையன் செல்லிருந்து தனக்கு போன் வந்ததாகவும், எதிரி ராமசாமி தனது தகப்பனாரை அடித்து விட்டதாக போன் வந்தது என்றும், அதைக் கேட்டு தான் பிலிக்கல்பாளையம் காவியா பேக்காி அருகே சென்று என்ன நட்நதது என்று தனது தகப்பனாரை விசாரிக்கும்போது ராமசாமி அடித்து விட்டதாக கூறினார்என்றும், உடனே தான் வீட்டிற்கு தனது தகப்பனாரை அழைத்துச் சென்று தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தியதாகவும், வலி இருப்பதாக சொன்னதால் தனது தகப்பனாரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் தன்னை காவல் துணைக் கண்காணிப்பாளார் 10.03.2016ல் விசாரித்தார் என்றும், அ.சா.6 திரு.தனசேகர் தங்களது சாட்சியத்தில், ஆனங்கூர் காட்டு வலவில் வசித்து வருவதாகவும், தான் விவசாயக் கூலி வேலை செய்து வருவதாகவும், டாக்டர் ஏ.பி. கணேசனுக்கு சொந்தமான தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து அதில் கரும்பு பயிாிட்டு வருவதாகவும் அதில் விளைந்த கரும்புகளை வெட்டித் தருமாறு சாட்சி கண்ணையனை கேட்டுக் கொண்டதாகவும், அதில் கண்ணையன் விளை்நத கரும்புகளை வெட்டிவிட்டு சுமார் 15 செண்ட் இடத்தில் கரும்புகளை வெட்டாமல் விட்டுவிட்டார் என்றும், ஆகவே, எதிாி ராமசாமியை கண்ணையன் விட்டு சென்ற 15 செண்ட் இடத்தில் விளைந்த கரும்புகளை வெட்டுமாறு கேட்டதாகவும், அதன் படி எதிாி ராமசாமி தனது15 செண்ட் கரும்புகளை வெட்டிக்கொடுத்தார் என்றும், காவல் துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாாித்தார் என்றும், அ.சா.7 தங்களது சாட்சியத்தில் மல்லிகாபுரம் காலனியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும் கடந்த 10.03.2016ம் தேதி பிலிக்கல்பாளையம் காவியா பேக்காியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகவும், அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் வந்து அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றும் அதை தன்னிடம் படித்துக் காண்பித்தார்என்றும் தானும் வீராசாமி அததில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜாில் உள்ள சாட்சி முதல் கைபெயாப்பம் தன்னுடையது தான் அது அ.சா.ஆ.3. அ.சா.8 டாக்டர் திரு.பரணிதரன் தங்களது சாட்சியத்தில் தான் தற்போது கொல்லிமலை சோளக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுாிந்த வருவதாகவும், கடந்த 07.03.2016ம் தேதி பிற்பகல் 02.00 மணியளவில் தான் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனையில் அவசர

சிகிச்சைப் பிாிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது வீரன் மகன் கண்ணையன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அவர் தன்னை தனக்கு தொிந்த நபர் 05.03.2016ம் தேதி காலை 6.30 மணியளவில் அடித்ததாக கூறினார் என்றும் அவர் தனக்கு நெஞ்சு வலி இருப்பதாகவும், முகத்தில் வீக்கம் உள்ளதாகவும் கூறினார் என்றும் அவர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்றும், அவருக்கு காணப்பட்ட வெளிப்புறக் காயங்களை சாதாரண வகையை சேர்ந்த காயங்கள் என்றும் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார் என்றும் அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 என்றும், காவல் துணைக் காண்காணிப்பாளார் அவர்கள் தன்னை விசாாித்தார் என்றும், அ.சா.9 திரு.சண்முகவடிவேல் தங்களது சாட்சியத்தில் சேளூர் கிராமம், வடுகப்பாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் விவசாயம் மற்றும் கரும்பாலை வைத்துதொழில் செய்து வருவதாகவும் கடந்த 05.03.2016ம் தேதி காலை 07.00 மணியளவில் பிலிக்கல்பாளையத்தில் உள்ள காவியா பேக்காியில் டீ குடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாகவும் அப்போத அந்த இடத்தில் கும்பலாக இருந்தது என்றும், தான் என்னவென்று விசாாித்ததாகவும், மல்லிகாபுரம் காலனியைச் சேர்ந்த சாட்சி கண்யைனும், வடுகப்பாளையத்தை சேர்ந்த ஆஜர் எதிாி ராமசாமியும் சண்டை போட்டுக் கொண்டதாக கூறினார்கள் என்றும், இதே விவரத்தை தான் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணையின் போதும் சொன்னதாகவும், அ.சா.10 திரு.வீராமசாமி தங்களது சாட்சியத்தில் மல்லிகாபுரம் காலனியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும் 10.3.2016ம் தேதி காலை 10.00 மணியளவில் பிலிக்கல்பாளையம் பேருந்து நிறுத்ததிற்கு அருகில் உள்ள காவியா பேக்காியில் டீ குடிக்க தானும், செல்வக்குமார் என்பவரும் சென்றதாகவும், அந்த இடத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒருபார்வை மகஜர் மற்றும் மாதிாி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகஜாில்உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அது அ.சா.ஆ.5, தன்னை காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் விசாாித்தார்கள் என்றும், அ.சா.11 திரு. லோகநாதன் தங்களது சாட்சியத்தில் மாவட்ட ஆட்சியர் அலவலகத்தில் மாவட்ட மேலாளராக பணிபுாிந்து வருவதாகவும், கடந்த 2016ம் ஆண்டு பரமத்தி வேலூர் வட்டாட்சியராக தான் பணிபுாிந்துவந்தபோது வேலூர்காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோளின்படி அ.சா.1 கண்ணையன், /பெ.வீரன் என்பவருக்கு பட்டியல் வகுப்பைச் சேர்ந்த இந்து, அருந்ததியர் என்று சான்றிதழ் வழங்கியதாகவும், அந்த சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆஜர் எதிாி ராமசாமி/பெ.வெங்கட்ராமன் என்பவர் இந்து, செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர் என்று சான்றிதழ் வழங்கியதாகவும், அ ந்த சான்றிதழ் அ.சா.ஆ-7. இது சம்பந்தமாக காவல்

துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார் என்றும், அ.சா.12 திரு.செல்வம் தங்களது சாட்சியத்தில் தான் தற்போது நாமக்கல் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் கடந்த 09.03.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு ஜேடர்பாளையம் காவல் நிலைய பொறுப்பு அலுவலலில் இருந்தபோது வேலூர்அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வ ந்த கண்ணையன், வயது 52 த/பெ. வீரன் என்பவர் சிகிச்சையில் இருந்ததாக வரப்பெற்ற தகவலின் போில் அங்கு சென்றதாகவும், அப்போது அவர் வாய்பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும் அதன் பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றதாகவும் பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.36/2016 சட்டப் பிரிவு 323 இதச உ/இ 3(1)(x) பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைக்கு எதிரான சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 பின்னர் நகலை உாிய நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்றொரு நகலை புலன்விசாரணை அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும், அ.சா.13 திருமதி.சுஜாதா தங்கள் சாட்சியத்தில் தான் தற்போது தர்மபுாி மாவட்த்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் பரமத்தி வேலூர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தபோது ஜேடர்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.36/2016 என்ற வழக்கை நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளார் அவர்களின் உத்திரவு C.No.G4/331/6722/2016 dt.09.03.2016-ன் படி புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், அந்த உத்திரவு அ.சா.ஆ.9. அதன்படி 10.03.2016 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு சம்பவயிடமான பிலிக்கல்பாளையம் காவியா பேக்காி எதிரில் உள்ள அரச மரத்தடி சென்று சாட்சிகள் செல்வக்குமார் மற்றும் வீராசாமி ஆகியோர்கமள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு மாதிாி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அந்த மாதிாி வரைபடம் அ.சா.ஆ.10. பார்வை மகஜர் அ.சா.ஆ.11. பின்னர் இவ்வழக்கின் வாதி கண்ணையன் அவர்களை விசாாித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவயிடச் சாட்சிகளான ராஜு, பழனி,சரவணன், சண்முகவடிவேல், குமார் மற்றும் பிறச் சாட்சிகளான வாதியின் மகன் குருசாமி, கரும்புக்காட்டு குத்தகைதாரர் தனசேகர் ஆகியோர்களை விசாாித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 14.03.2016 ம் தேதியன்று வாதி மற்றும் எதிாிக்கு சாதிச் சான்றிதழ் கேட்டு பரமத்தி வேலூர் வட்ாட்சியர் அவலுவலத்தில் வேண்டுகோள் கடிதம்கொடுக்கப்பட்டதாகவும், பின்னர் 29.03.2016 ம் தேதியன்று வாதி கண்யைன் என்பவருக்கு இந்து, பட்டியல்வகுப்பைச்சேர்ந்த அருந்ததியர் என்றும் எதிாி ராமசாமிக்கு இந்து, ரெட்டிகஞ்சம் எனவும் சாதிச் சான்றிதழ்

பெறப்பட்டதாகவும், மேலும் வாதிக்கு காயங்கள் சொற்பக் காயங்கள் என்று விபத்து பதிவேட்டின் பின்புறமே மருத்துவர் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றும் பின்னர் 30.03.2016 ம் தேதியன்று மருத்துவர் திரு.பரணிதரன், அரசு மருத்துவர் நாமக்கல் மற்றும் திரு.லோகநாதன், தாசில்தார் பரமத்தி வேலூர் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு.செல்வம், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஜேடர்பாளையம் காவல் நிலையம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பெற்றதாகவும், பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் கண்ணையன் சிகிச்சைக்கு சேரும்போது எழுதப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.12, பின்னர் 07.04.2016 ம் தேதியன்று தனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6) அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றியவைகளை எதிரியிடம் குவிமுச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியத்தை மறுத்து பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். மேலும் அவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறியதால் எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இனி தீர்மானிக்கவேண்டியது என்னவென்றால் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

8) இந்த சிறப்பு அமர்வு வழக்கில் சாட்சி கண்ணையன் என்பவரும் எதிரி ராமசாமி என்பவரும், கரும்பு விவசாய நிலத்தில் இருந்து கரும்பை வெட்டி எடுத்து அதை கரும்பு ஆலைகளிடம் தரகுக்கு விற்று தரகு கமிசன் பெற்று வரும் தொழிலை தனித்தனியாக செய்து வருகிறார்கள். அதன்படி குத்தகைத்தாரர் திரு.தனசேகரன் என்பவர் தாம் எடுத்த குத்தகை நிலத்தில் கரும்பை பயிரிட்டு வந்தததில் ஒரு ஏக்காரில் கரும்பை வெட்டுவதற்கு சாட்சி கண்ணையன் கூலி பேசி அதில் 85 செண்ட் நிலத்தில் கரும்பை வெட்டி விட்டு பின்னர் குத்தகைதாரர் தனசேகரனிடம் கூலி தொடர்பான ஏற்பட்ட தகராறில் 15 செண்ட் நிலத்தில் மட்டும் கரும்பை வெட்டாமல் விட்டுவிட்டு வந்ததால் குத்தகைதாரர் திரு.தனசேகரன் என்பவர் எதிரி ராமசாமியை ஏற்பாடு செய்து கூலிக்கு மீதம் இருந்த 15 செண்ட் நிலத்தில் கரும்பை வெட்டி கரும்பாலைக்கு விற்று விட்டார். சாட்சி கண்ணையனுக்கு கூலி கிடைக்காமல் இருந்ததால் கடந்த 05.03.2016 ம் தேதி காலை 07.00 மணியளவில் பிலிக்கல்பாளையம், காவியா பேக்கரியில் டீ வாங்கி குடித்துகொண்டு சாட்சி கண்ணையன் நின்று கொண்டிரும்போது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி ராமசாமி தாம் வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நிற்கும்போது சாட்சி கண்ணையன் எதிரி ராமசாமியை பார்த்து ஏன் நான் 15 செண்ட் நிலத்தில் கரும்பு

வெட்டாமல் கூலிக்காக சாட்சி தனசேகரனிடம் கூலிக் கேட்டு இருந்துவந்த நிலையில் குறைந்த கூலிக்கு பேசி கரும்பை வெட்டினாய் என்று கேட்கும்போது, எதிரி ராமசாமி அப்படித்தான் வெட்டுவேன் உனக்கு எதற்கு கூலி தரவேண்டும் "சக்கிலி நாயே " என்று திட்டுக்கொண்டு சாட்சி கண்ணையன் இடது கன்னத்தில் அறைத்து விட்டதாகவும், அதனால் தான் காயமுற்றதாக புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 கண்னையன் சொல்லியுள்ள நிலையில் அ.சா.1 தமது குறுக்கு விசாரணையில், தமது ஜாதி பெயரை புகாரிலும், போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் புகார் வாக்குமூலத்தில் சாட்சி கண்ணையன் தனது ஜாதி பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆகவே, **ஜாதி பற்றிய சங்கதியை அ.சா.1 கண்னையன் தமது புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடாமல் குறிப்பிட்டதாக சொல்லி குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பது முன்னுக்கு பின் முரணாக உள்ளது.** மேலும் சாட்சி கண்னையன் புலன் விசாரணை அலுவலரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் வேலூர் அரசு மருத்துவமனையில் தாம் சிகிச்சைக்கு சேரும்போது தம்மை அடித்த நபர் யார் என்று தெரியாது என்று பதட்டத்தில் சொல்லியிருப்பதாக சொல்லியிருக்கிறார். மேலும், வேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்திருப்பதாக சொல்லியுள்ளார். ஆனால் தற்போது நீதிமன்ற விசாரணையில் அவர் பதட்டத்துடன் சொன்னதாக சொல்லவில்லை. இந்த நிலையில் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டை பார்க்கையில் அது நாமக்கல் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்த பதிவேடாகவே தோன்றுகிறது. ஆனால், வேலூர் அரசு மருத்துவமனையில் சாட்சி கண்னையன் சிகிச்சை எடுக்கும்போது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு எந்தவிதமான நம்பதகுந்த விளக்கம் அரசு தரப்பில் முன்வைக்கவில்லை. ஆகவே, **சாட்சி கண்னையன் முதன் முதலாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும்போது பதிவுசெய்யப்பட்ட விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருப்பதால் அரசு தரப்பில் விபத்து பதிவேடான முக்கிய ஆவணத்தை மறைத்துள்ளதாக தெரிகிறது.** அ.சா.1 திரு.கண்னையன் தமது சாட்சியத்தில், எதிரி ராமசாமி கடந்த 05.03.2016 ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் கரும்பு வெட்டும் கூலி சம்மந்தமாக கேட்கும்போது தம்மை ஆஜர் எதிரி ராமசாமி என்பவர் "சக்கிலி நாயே " என்று சாட்சியம் அளித்திருக்கும்போது அ.சா.2 ராஜு அதை உறுதிபடுத்தி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 சரவணனும் அ.சா.1 கண்னையனை ஆதரித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 பழனி என்பவரும் சாட்சி கண்னையனை ஆதரித்து சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில், இந்த வழக்கு விசாரணை நீதிமன்றமானது இந்திய உச்ச

நீதிமன்றமானது அஸ்மத்துனிஸா எதிர் ஆந்திரா அரசு AIR 2011 SC 1905 = (2011) 1 SCC 259 என்ற வழக்கில் அளித்த தீர்ப்பை படித்துப் பார்க்கும்போது அதில்

> A reading of section 3 shows that two kinds of insults against a member of scheduled caste or a scheduled tribes are made punishable - one as defined under sub-section (ii) and the other as defined under sub-section (x) of the said section. A combined reading of the two sub-sections shows that under section (ii) insult can be caused to a member of the scheduled caste or a scheduled tribes by dumping excreta, waste matter, carcasses or any other obnoxious substance in his premises or neighbourhood, and to cause such insult, the dumping of excreta etc, need not necessarily be done in the presence of the person insulted and whereas under sub-section (x), insult can be caused to the person insulted only if he is present in view of the expression "in any place within public view". The words "within public view", in my opinion, are referable only to the person insulted and not to the person who insulted him as the said expression is conspicuously absent in sub-section (ii) of section 3 of Act 3/1989. By avoiding to use the expression "within public view" in sub-section (ii), the Legislature, I feel, has created two different kinds of offences an insult caused to a member of the scheduled caste or a scheduled tribes , even in his absence, by dumping excreta etc. in his premises or neighbourhood and an insult by words caused to a member of the scheduled caste or a scheduled tribes "within public view" which means at the time of the alleged insult, the person insulted must be present as the expression "within public view" indicates or otherwise, the Legislature would have avoided the

> use of the said expression which it avoided in sub-section (ii) or would have used the expression "in any public place".

மேலும், இந்த வழக்கு விசாரணை நீதிமன்றமானது பம்பாய் உயர்நீதிமன்றமானது V.P. Shetty VS Senior Inspector of Police, Colaba, Bombay reported in 2005 Crl.J.3560 (Bombay) என்ற வழக்கில் அளித்த தீர்ப்பை படித்துப் பார்க்கும்போது கீழே கண்டவாறு சொல்லியுள்ளது.

> "the expression "within public view" has specific meaning and in order to attract the provision of law under section 3(1)(x) of the Atrocities Act, the acts amounting to insult or humiliation to the member of Schedule castes or Schedule Tribes should be visible and audible to the public"

மேற்படி வழக்கு தீர்ப்புகளை படித்து பார்க்கும்போது பிரிவு 3(1)(x) பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சாட்டம் 1989-ன் கீழ் தண்டிக்கப்பட, எதிரியானவர் வேண்டுமென்று பட்டியல் ஜாதியினரை பொதுமக்கள் பார்வையில் அவமானப்படுத்த வேண்டும் என்று கெட்ட எண்ணத்தோடு சொல்லியிருக்க வேண்டும் ஆனால் இந்த வழக்கில் அ.சா.2 முதல் அ.சா.4 வரையுள்ளான நபர்கள் எதிரி ராமசாமி சாட்சி கண்ணையனை ஜாதியை சொல்லி இழிவுப்படுத்தியதாக சொல்லியிருந்தாலும் அவர்கள் அனைவரும் பட்டியல் ஜாதியை சார்ந்தவர்கள் என்றே தெரிகிறது. அவர்கள் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் அல்லாத நபர்கள் இல்லை என்றும் தெரிகிறது. ஆகவே, **இந்த வழக்கில் சாட்சி கண்ணையனை எதிரி ராமசாமி என்பவர் ஜாதியை சொல்லி இழிவு படுத்தியதாக பட்டியல் ஜாதியினர் மற்றம் பட்டியல் பழங்குடியினர் அல்லாத நபர்கள் தனிப்பட்ட அவர்கள்ற யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றே தெரிகிறது**. இந்த வழக்கில் திருமதி.சுஜதா என்பவர் வேலூர் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது புலன் விசாரணை செய்துள்ளதாக

சாட்சியம் அளித்துள்ளார். அவர் தமது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சாட்சி கண்ணையன் பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும்போது தம்மை அடித்த நபர் அடையாளம் தொியாத நபர் என்று சொல்லியிருப்பதாக விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சாிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவரை தாம் விசாாிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே, **அ.சா.13 திருமதி.சுஜதா காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் முதன் முதலாக சாட்சி கண்ணையன் சிகிச்சைக்கு சேரும்போது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை பற்றி வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாாிக்காமல் இருக்கும்போது அவர் ஒருதலைபட்சமாக புலன் விசாரணை செய்துள்ளதாக தொிகிறது.** ஆகவே, இந்த சிறப்பு அமர்வு வழக்கை ஒருசேரப்படித்துப் பார்க்கையில், கீழே கண்ட சங்கதிகள் தொியவருகிறது.- (1) ஜாதி பற்றிய சங்கதியை அ.சா.1 கண்ணையன் தமது புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடாமல் குறிப்பிட்டதாக சொல்லி குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. (2) சாட்சி கண்ணையன் முதன் முதலாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும்போது பதிவுசெய்யப்பட்ட விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருப்பதால் அரசு தரப்பில் விபத்து பதிவேடான முக்கிய ஆவணத்தை மறைத்துள்ளதாக தொிகிறது.

(3) இந்த வழக்கில் சாட்சி கண்ணையனை எதிாி ராமசாமி என்பவர் ஜாதியை சொல்லி இழிவு படுத்தியதாக பட்டியல் ஜாதியினர் மற்றம் பட்டியல் பழங்குடியினர் அல்லாத நபர்கள் தனிப்பட்ட அவர்கள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றே தொிகிறது. (4) அ.சா.13 திருமதி.சுஜதா காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையில் முதன் முதலாக சாட்சி கண்ணையன் சிகிச்சைக்கு சேரும்போது பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை பற்றி வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாாிக்காமல் இருக்கும்போது அவர் ஒருதலைபட்சமாக புலன் விசாரணை செய்துள்ளதாக தொிகிறது மேலே கண்டுள்ள இந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், அரசு

தரப்பில் சொல்லப்பட்டது போல் ஒரு சம்பவம் நடைபெற்றதா? என்பதே சந்தேகத்திற்கிடமளிப்பதாக உள்ளது. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி விடுதலை செய்யத்தக்கவர் என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மூலமும், சான்றாவணங்கள் மூலமும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரிகளை அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளான பிாிவுகள் 323 இதச. 3(1)(r) of SC/ST (POA) Amendment Act 2015, மற்றும் 3(1)(s) of SC/ST (POA) Amendment Act 2015 -ன் கீழ் எதிாியானவர் குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மீதான பிணைப்பத்திரம் ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் இல்லாததால் சான்று பொருட்கள் பற்றிய உத்திரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

இந்த வழக்கின் தீர்ப்பை **COVID - 19** என்பதால் **CISCO APP -** மூலம் தீர்ப்பு எதிாிக்கு பகரப்பட்டது**.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2020 ம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
வன் கொடுமை தடுப்பு சிறப்பு நீதிபதி, நாமக்கல்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 திரு. கண்ணையன்
அ.சா.2 திரு.ராஜு
அ.சா.3 திரு.சரவணன்
அ.சா.4 திரு. பழனி
அ.சா.5 திரு. குருசாமி
அ.சா.6 திரு. தனசேகரன்
அ.சா.7 திரு. செல்வகுமார்
அ.சா.8 Dr.பரணதீரன்

அ.சா.9 திரு.சண்முகவடிவேல்
அ.சா.10 திரு.வீராசாமி
அ.சா.11 திரு.லோகநாதன்
அ.சா.12 திரு.செல்வம் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்)
அ.சா.13 திருமதி.சுஜாதா (காவல் துணை கண்காணிப்பாளர்)
<u>எதிரி தரப்பு சாட்சிகள் --</u> இல்லை

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.03.2016 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 09.03.2016 | புகாரில் உள்ள அ.சா.2 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 10.03.2016 | பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 10.03.2016 | விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | 10.03.2016 | பார்வை மகஜாில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | .03.2016 | அ.சா.1 ன் ஜாதிச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | 24.03.2016 | எதிரியின் ஜாதிச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | 09.03.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 09.03.2016 | நாமக்கல் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கிளன் உத்திரவு |
| அ.சா.ஆ.10 | 10.03.2016 | மாதிாி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | 10.03.2016 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.12 | 05.03.2016 | விபத்து பதிவேடு |

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் -</u> இல்லை
<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்--</u> இல்லை.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
வன் கொடுமை தடுப்பு சிறப்பு நீதிபதி, நாமக்கல்.

SPECIAL COURT FOR SC & ST (POA) ACT CASES, NAMAKKAL.

Fair Judgment in

S.C.No.01/2017

Dated .25.06.2020